‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# மாணவர்களுக்கு மட்டும் சிறப்புப் பேருந்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, செப்.14 -**

**‘திராவிட மாடல்’ ஆட்சியில் மாணவர்களுக்கு மட்டும் சிறப்புப் பேருந்துகள் இயக்கி வருவது தொடர்பாக, ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியை குறிப்பிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கீழ்க்கண்டவாறு சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**


MTC's special bus services for school students a big hit

The MTC introduced 25 buses to help students travel safely to 25 government-aided schools in the morning and back home in the evening hours. Teachers are also allowed to travel in these buses

‘தி இந்து’ ஆங்கில நாளிதழின் செப்.11 அன்றைய பதிப்பில் கழக அரசின் மேற்காணும் திட்டத்தை புகழ்ந்துரைத்து செய்திக் கட்டுரை வெளியானது.

அதனையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று விடுத்த சமூக வலைதளப் பதிவு வருமாறு-

சட்டமன்ற உறுப்பினராக, 1989இல் எனது முதல் உரையே மாணவர்களுக்கு இலவச ‘பஸ் பாஸ்’ வழங்க வேண்டும் என்பதுதான்.

அதனை ஏற்றுக்கொண்டு, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செயல்படுத்திய அத்திட்டம் நாட்டுக்கே வழி காட்டியது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது மாணவர் மட்டும் சிறப்புப் பேருந்துகளை நமது ‘திராவிட மாடல்’ ஆட்சியில் இயக்கி வருகிறோம்.

எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களும், போக்குவரத்துத் துறை அதிகாரிகளும் இத்திட்டத்தின் செயல்பாட்டைத் தொடர்ந்து விழிப்போடு கண்காணித்து, மேலும் மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



# மாண்புமிகு முதல்வரின்... ஊக்கம் தரும் உற்சாக மருந்து!

**நா**ளை நடக்கப் போவது பாராட்டு விழா என நான் சொல்லமாட்டேன். இளையராஜாவின் அடுத்த கட்ட சாதனைக்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பில் தமிழ்நாட்டு முதல்வர் அமைத்துக் கொடுக்கும் ஒரு படிக்கட்டு என்றே சொல்வேன்.

எல்லாத் துறைகளிலும் சாதனையாளர்களுக்கு ஏணி அமைத்து ஏற்றிவிடும் நமது முதல்வர், திரை இசைத் துறைக்குத் தரும் ஒரு உற்சாக மருந்தாகவே இதனைக் கருதுகிறேன்.

அவர் ஒரு இசைக் கவிஞன்... அதனால் 'இசைஞானி' என அழைத்து மகிழ்ந்தார் கலைஞர். உலக நாடுகள் போற்றும் வண்ணம் Symphon யில் சாதனை புரிந்தார் இசைஞானி... அவரை அடுத்த கட்ட வெற்றிக்குப் பாராட்டு விழா என்ற பாதை மூலமாக அனுப்பி வைக்கிறார் நமது முதல்வர்.



பாராட்டி மகிழ்வதும், பரிசுகள் வழங்கி சாதனையாளர்களை கவுரவிப்பதும் தமிழனின் தனிப்பண்பு.

வாழ்க முதல்வர்... வளர்க இசைஞானி!


**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - பிரதமருக்கு கடிதம்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

சட்டரீதியான கவலைகளையும் எழுப்புகிறது என்றும், தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கடந்த காலங்களில் சட்டப்பூர்வ பாதுகாப்புகளை நீர்த்துப்போகச் செய்யும் இத்தகைய அலுவலகக் குறிப்பாணைகளை ரத்து செய்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், ALEMBIC PHARMACEUTICALS LTD. V. ROHIT PRAJAPATI & ORS. (2020) வழக்கில், உச்சநீதிமன்றம், அலுவலகக் குறிப்பாணைகள் போன்ற நிர்வாக அறிவுறுத்தல்கள் மூலம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) கட்டமைப்பில் கணிசமான திருத்தங்களைக் கொண்டு வரமுடியாது என்றும், அத்தகைய கருவிகள் சட்டப்பூர்வ அறிவிப்புகளை மீற முடியாது என்றும் தீர்ப்பளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தற்போதைய அலுவலகக் குறிப்பாணை பொது மக்கள் கருத்துக் கேட்பிற்கு வழிவகுக்காமல், அனுமதிக்க முடியாத நிர்வாகச் சட்டத் திருத்தத்திற்குச் சமமாக உள்ளது என்றும், எனவே இது நிலைக்கத்தக்கதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மக்களாட்சி நெறிமுறைகளுக்கு எதிரானது!

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை மாற்றங்கள் நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் வெளிப்படையாக விவாதிக்கப்பட வேண்டும் என்றும், மாநில அரசுகள் மற்றும் பொதுமக்களின் உரிய ஆலோசனையுடன் செய்யப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், மேற்கூறிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் வெளியிடப்படும் இத்தகைய அறிவிப்புகள் கூட்டாட்சி உணர்வுக்கும், நமது நாட்டின் மக்களாட்சி நெறிமுறைகளுக்கும் எதிரானதாக இது அமையும் என்றும் அவர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, 08.09.2025 நாளிட்ட அலுவலகக் குறிப்பாணையை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு ஒன்றிய அரசை தான் வலியுறுத்துவதாகவும், கடந்த காலங்களில் எப்போதும் செய்யப்பட்டது போல, நாட்டின் முன்னேற்றத்திற்கு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு பங்களிப்பதற்கான தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை இத்தருணத்தில் மீண்டும் தான் வலியுறுத்த விரும்புவதாகவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ம.சேசுராசு தலைமை! ஜேம்ஸ் தேவதாசன் - பெ.கணேசன் பங்கேற்பு!

# மும்பை தி.மு.க. சார்பில் கழக முப்பெரும் விழா!

மும்பை, செப். 14 –

மும்பை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா கழகம் தோன்றிய நாள் ஆகிய முப்பெரும் விழா நாளை (14.9.2025 ஞாயிறு) இரவு 7 மணிக்கு தாராவி கலைஞர் மாளிகையில் நடைபெறுகிறது.

மாறன் ஆரியசங்காரன் (பொறுப்புக்குழு உறுப்பினர்) வரவேற்புரையாற்றுகிறார்.

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் அன்பழகன் பொற்கோ, க.மு.மாணிக்கம், ம.நீதிதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைவர்களின் படங்களை பம்பாய் திருவள்ளு வர் மன்றம் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைத்து மரியாதை செய்கிறார். மும்பை திராவிடர் கழகம் தலைவர் பெ.கணேசன் சிறப்புரையாற்றுகிறார்.

இதில் சாலமோன் ராஜா (அமைப்புச் செயலாளர் – மராத்திய மாநில வி.சி.க.), அ.இரவிச்சந்திரன், (தலைவர் – மும்பை பகுத்தறிவாளர் கழகம்),

திருமதி சுகுணா அன்பழகன், திருமதி வளர்மதி கணேசன், திருமதி வனிதா இளங்கோவன், செல்வி க.அறிவுமதி ஜான் சாமுவேல், ஆ.பாலசுப்பிரமணியன், என்.வி.சண்முகராசன் காரை கரு.ரவீந்திரன் களந்தை சண்முகவேலு, எஸ்.பி.செழியன், இரா.மதியழகன், வளர்மதி பொற்கோ,

பேலஸ்துரை, க.ராசன், இரா.காந்தி, அப்துல்திவான் மைதீன், வே.ரவிச்சந்திரன் சேரை ச.பிரகாஸ், சேலம் மா.சீனிவாசன், பி.இராமையா, எம்.ராஜன் (RTO) தே.ஸ்டீபன், சுப.காளிமுத்து, கே.ஏ.ஜாகீர் உசைன், கி.தனுஸ்கோடி ஜே.வின்சென்ட், ச.பெரியார் பாலா, அ.கண்ணன், இ.அந்தோணி, மகேந்திரன் அண்ணாமலை, சங்கர் திராவிட், தே.பொற்செழியன், எம்.ராஜேந்திரன், க.வரதராஜன், பொன்.சுப்பிரமணியன், ப.மாரிமுத்து பொய்சர், க.மூர்த்தி, குப்பன், பி.எஸ்.அழகுராஜா ஆகியோர் உரையாற்றுகிறார்கள். தாராவி தி.மு.க.வைச் சேர்ந்த ஆர்.ரவி ரஜினி நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# மிசா காந்தல் இராசு துணைவியார் தவமணி அம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 14–

நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் – மறைந்த மிசா. காந்தல் இராசு அவர்களின் துணைவியார் தவமணி அம்மாள் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

நீலகிரி மாவட்ட தி.மு.க. முன்னாள் செயலாளர் - மறைந்த மிசா.காந்தல் இராசு அவர்களின் துணைவியாரும், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.இளங்கோவன் மற்றும் மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆர்.வெங்கடேஷ் ஆகியோரது தாயாருமான திருமதி. தவமணி அம்மாள் (வயது 87) அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

அன்னாரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தாருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

முந்திரி சாகுபடி, உற்பத்தியை அதிகரிக்க - தொழிலாளர் நலன் பாதுகாத்திட ஏற்பாடு!

# ‘தமிழ்நாடு முந்திரி வாரியம்’ தனி அமைப்பு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, செப். 14–

தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியினை மேலும் அதிகரித்து, முந்திரி சாகுபடி செய்யும் உழவர்கள், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திட “தமிழ்நாடு முந்திரி வாரியம்” என்னும் தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை - உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியை அதிகரித்து, வேளாண் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச்செய்து உழவர்கள் நலன்காக்க பல்வேறு உன்னதத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்திட ஆணை வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2025-26-ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் “முந்திரியின் பரப்பினை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்கவும், முந்திரிசார் தொழில்நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கவும், முந்திரி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கவும் ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு முந்திரி வாரியம் (Tamil Nadu Cashew Board) ஏற்படுத்தப்படும்” என அறிவிப்புச் செய்ய ஆணையிட்டதைத் தொடர்ந்து அவ்வாறே அறிவிக்கப்பட்டது.

தற்போது, தமிழ்நாட்டில் மாநில அளவிலான முந்திரி வாரியத்தை அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, “தமிழ்நாடு முந்திரி வாரியம்” கடலூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும். வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் இவ்வாரியத்தின் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைவராகவும், அரசால் நியமிக்கப்படும் பிரதிநிதி துணைத்தலைவராகவும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் உறுப்பினர் செயலராகவும், இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx), முதல்வர் (தோட்டக்கலை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முந்திரி பயிரிடும் மாவட்டங்களிலிருந்து அரசால் நியமிக்கப்படும் இரண்டு விவசாயிகள் உள்ளிட்ட 12 உறுப்பினர்களைக் கொண்டு இவ்வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

### வாரிய நிர்வாகக் குழுக் கூட்டம்!

மேலும், தமிழ்நாடு முந்திரி வாரியத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரைத் அவர்களை தலைவராகவும், இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஒருங்கிணைப்பாளராகவும், சிறப்பு செயலாளர் (நிதித்துறை), ஆணையர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, ஆணையர், தொழிலாளர் நலத் துறை, இயக்குநர், வேளாண்மைத் துறை, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசால் நியமிக்கப்படும் 2 முன்னோடி முந்திரி விவசாயிகள் மற்றும் 2 முந்திரி பதப்படுத்தும் தொழில் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு நிர்வாகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. முந்திரி உற்பத்தி, பதப்படுத்துதல், முந்திரி தொழிலாளர்களின் நலன் காத்தல் உள்ளிட்ட பல்வேறு பொருண்மைகள் குறித்து விவாதித்து முடிவெடுக்க மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது தேவைக்கேற்ப வாரியத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் நடத்தப்படும்.

### புதிய வேலைவாய்ப்புகள்!


தமிழ்நாட்டின் முந்திரி உற்பத்தி, முந்திரித் தொழிற்சாலைகளின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளதால், ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து பதப்படுத்தப்படாத முந்திரிக் கொட்டைகளை இறக்குமதி செய்து பதப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையினை சீராக்கும் வகையில் முந்திரி உற்பத்தியில் தன்னிறைவு அடைவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு முந்திரி வாரியம் செயல்படும். இதன் மூலம் முந்திரி சாகுபடி, அறுவடை மற்றும் மதிப்புக் கூட்டுதல் தொடர்பான புதிய வேலைவாய்ப்புகள் பெருகும்.

உழவர்களின் தேவைக்கேற்ப அதிக மகசூல் தரும் புதிய இரகங்கள், உரிய இயந்திர தொழில்நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடைப் பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்து உரிய ஆலோசனைகள் வழங்குதல், உலகளவில் உள்ள அதிக மகசூல் தரும் இரகங்களின் நடவுச்செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குதல், முந்திரிப் பயிர் தொடர்பான தொழில்நுட்பங்களுக்கு செயல் விளக்கம் அளித்தல், உழவர்களின் தேவைக்கேற்ப புதிய தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்த பயிற்சிகள் வழங்குதல், முந்திரி பதப்படுத்தும் நிலையம் அமைத்தல் தொடர்பான நிதியுதவி மற்றும் திட்டங்கள் குறித்து உரிய ஆலோசனை வழங்குதல், முந்திரித் தொழிலாளர்களை சிறு குழுக்களாக (குறைந்தபட்சம் 10 நபர்கள்) ஒருங்கிணைத்து தொழிலாளர் நலத்திட்டங்கள் மற்றும் தொழிலாளர் நல நிதி பெறுவதற்கான உரிய ஆலோசனை வழங்குதல், முந்திரிக்கான சேமிப்பு வசதிகள், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் மதிப்பு சங்கிலி (Value Chain) குறித்த ஆலோசனை வழங்குதல், முந்திரி ஏற்றுமதி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு தகுந்த வாய்ப்புகளை நெறிமுறைப்படுத்துதல், முந்திரி சார்ந்த மதிப்புக்கூட்டுதல் மேற்கொள்ளும் நபர்களை ஒருங்கிணைத்து ஏற்றுமதிக்கு ஊக்குவித்தல் போன்ற பல்வேறு பணிகள் தமிழ்நாடு முந்திரி வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

இதன்மூலம் முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் பயன்பெறுவதுடன், முந்திரித் தொழில் மேம்படும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மயிலை ந.பூ.இராமஜெயம்**
**செப்டம்பர் 14 (2007)**



**இளமைக்காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**வட்ட மற்றும் பகுதி அவைத் தலைவராகவும் பின்னர், பகுதிக் கழகச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1996ஆம் ஆண்டு மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்து நாளிதழ் தொழிற்சங்கத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**“நான் மதிக்கின்ற, போற்றுகின்ற, புகழ்கின்ற, பாராட்டுகின்ற, என்நெஞ்சில் வைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு தொண்டன் ராமஜெயம்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**